


Our Chezhumai is given to the Small Groups in bilingual format (English and Tamil)

எங்களது செழுமை மாத இதழ் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறுகுழுக்களுக்கு கொடுக்கப்படுகிறது



## Best practices to be learnt from this month Chezhumai:

1. Practicing intercrops regularly
2. Planting multiple tree species
3. All activities should be done by good plan and care
4. Improve the soil quality by using natural manure
5. Attend all the Node meeting and learn the trainings given in the Node and practice the same in the grove

## இம்மாத செழுமையின் மூலம் கற்றுக் கொண்டு கடைப்பிடிக்க வேண்டிய பயிற்சி முறைகள்:

1. தவறாமல் ஊடுபயிர் செய்வது
2. பலவிதமான மரங்களை நடவு செய்வது
3. எல்லா காரியத்தையும் நல்ல திட்டமிட்டு ஆர்வத்தோடு செய்வது
4. இயற்கை உரம் கொண்டு மண்வளத்தை கூட்டுவது
5. TIST யின் கணுக்கூட்டத்தில் தவறாமல் பங்கேற்று அதில் கற்கும் சிறப்பு பயிற்சி முறைகளை கடைப்பிடிப்பது

**TIST Tree Planting India Private Limited**
Flat A, Plot No.69, Sankara Nagar, 26th Street
Pammal, Chennai 600075. Mobile: 9840299822
Email: josephrexon@tist.org / Visit us at www.tist.org

## Arunagiri Small Group

We the members of Arunagiri Small Group participate in all TIST Node meetings regularly and follow the best practices learnt in the Node. We have three groves in our group and we have planted trees like teak, mango and sapota all totaling to 3072 tees. We are maintaining and protecting all our trees in best condition.

While maintaining the trees in good condition, we are also practicing intercrops in the tree groves. We have installed drip irrigation for our groves and we are taking more care in removing unwanted weeds which grow in between the trees and the intercrops. Also to protect the environment we are planning to plant more trees. It is a great pleasure to be part of TIST Program and we are regularly receiving TIST voucher payment for all our live trees.



Arunagiri Small Group
அருணகிரி சிறுகுழு

## அருணகிரி சிறுகுழு

திருத்தணி மையத்தில் அருணகிரி சிறுகுழு ஆகிய நாங்கள் திட்டத்தில் மாதாந்திர கணுகுழு கூட்டத்தில் தவறாமல் கலந்துக்கொண்டு கூட்டத்தில் கூறப்படும் கருத்துகளை தவறாமல் கடைப்பிடித்து வருகின்றோம். எங்கள் குழுவில் மூன்று தோப்புகள் உள்ளன. அதில் தேக்கு, மா, சப்போட்ட மொத்தம் **3072** மரக்கன்றுகள் நடவு செய்து உள்ளோம். இதை சிறந்த முறையில் பாதுகாத்து வருகின்றோம்.

நடவு செய்த செடிகளை நல்ல முறையில் பராமரித்தும் அதில் ஊடுபயிறும் நடவு செய்து உள்ளோம். சொட்டு நீர் பாசனம் மூலமாக நீருற்று எப்போழுதும் இருக்கும்படி செய்துள்ளோம். செடிகளுக்கு இடையில் பூண்டு புதற்கள் வளரவிடாமல் அகற்றி செடிகளை பாதுகாத்து வருகின்றோம் மற்றும் இயற்கை சீட்ரத்தை பாதுகாக்கும் வகையில் இன்னும் பல செடி வகைகளை நடவு செய்ய உள்ளோம். TIST திட்டத்தில் இணைந்திருப்பது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. TISTன் ஊக்கத் தொகையை தவறாமல் பெற்று மகிழ்ச்சியடைகிறோம்.



## Veeran Small Group

Veeran Small Group of Vallam Village in Villupuram Districts is doing good work in Gingee center. They are following the best practices and taking care of trees in good condition, also, the members are practicing intercrops in their tree groves. They choose crops according to the time and need of the society.

Presently, they have cultivated groundnet as intercrops. In the borders of the grove, they have planted drumstick trees. In a year, this group members are getting Rs.15,000 to Rs.20,000 as income from their drumstick trees. They are following the natural way in their field and getting good returns. Above these income, they are also getting the carbon income for all their live trees from TIST.

## வீரன் சிறுகுழு

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி மையம் வல்லம் கிராமத்தில் வீரன் சிறுகுழுவானது மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மேற்படி இவர்கள் தங்களின் தோப்பில் TIST ன் ஆலோசனைகளின் படி திட்டமிட்டு மரக்கன்றுகளை வைத்து வளர்த்து வருவது மட்டுமின்றி திட்டமிட்டு சிறப்பாக கால வேறுபாடுகளுக்கு ஏற்றார் போல ஊடுபயிரும் சிறப்பாக செய்து வருகின்றனர்.

தற்போது இவர்கள் நிலக்கடலை பயிரை ஊடுபயிராக விவசாயம் செய்துள்ளனர். அதுமட்டுமின்றி நிலத்தின் ஓரமாக நவீன ரக முருங்கை மரத்தினை வைத்துள்ளனர். இதன் மூலம் ஆண்டோன்றிற்கு 15,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய் வரை வருமானம் ஈட்டுகின்றனர். இவர்கள் இயற்கை முறையில் விவசாயம் செய்து TIST ன் ஆலோசனைகளின் படி மிகுந்த பலன்களை பெற்று வருகின்றனர். மேற்படி இவர்கள் TIST ன் கார்பன் வர்த்தகத்தின் மூலம் ஊக்கத் தொகையும் பெற்று வருகின்றனர்.



## Why does TIST emphasis to grow multiple species of trees ?

Trees are the natural gift for mankind and all other living beings. There are hundreds and hundreds of tree species. Every species of trees has a unique life cycle, i.e, a time to shed the leaves, a time to sprout, a time to flower and a time to give fruits. If a Small Group has got 1000 trees of same species, for example, neem, the entire grove gives a worthless look during peak summer, because all the 1000 neem trees will shed down their leaves jointly. By chance if there is fire in one corner of the grove, the entire grove goes a waste. If there are two more different species in the same grove, which has a different time period to shed their leaves, then the grove will always be green.

If a Small Group has got 1000 mango trees, they will get their yield only during April June. During the rest of the year they are left with no fruits. Suppose they had planted two more different species like Sapota and Gouva, and then the rest of the year will also be a happy period with continuous yield.

The main two reasons to have multiple species is:

- ☞ There should be some trees always, which have full leaves in it, so that the process of burning the carbon is never-ending.
- ☞ Continuous fruit yield will help you to be self-sustained.

## ஏன் பல இண மரங்களை வளர்க்க TIST வலியுறுத்துகிறது ?

மரங்கள் மனிதனுக்கும், விலங்குகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள இயற்கை பரிசாகும். நூற்றுக்கணக்கான இணவகைகள் இவற்றில் உள்ளன. ஒவ்வொரு இனத்திற்கும் அரிய வகையில் வாழ்க்கை சுழற்சி முறையும், காலமும் உள்ளது. இலைகளை உதிர்க்க ஒரு காலம், முளைக்க ஒரு காலம், பூக்க ஒரு காலம், கணிக்கொடுக்க ஒரு காலம் என்று பலகாலங்களை உள்ளடக்கியுள்ளது. ஒரு குழுவினர், ஒரே இனத்தை சார்ந்த ஆயிரம் மரங்களை கொண்டுள்ளனர் என்று வைத்துகொள்வோம். ஊதாரனமாக வேப்ப மரங்கள் இருந்தால் வெப்ப காலத்தில் **1000** மரங்களும் இலைகளை உதிர்த்து., முழு தோப்பு,மே பயனற்ற தோற்றத்தை கொண்டிருக்கும். எங்காவது ஒரு மூலையில் தீப்பற்றி கொண்டால், முழு தோப்புமே எரிந்து சாம்பலாகும். ஆனால் இரண்டு அல்லது மூன்று வகைகள் கொண்டிருந்தால் ஒவ்வொன்றும், வெவ்வேறு காலத்தில் இலைகளை உதிர்க்கும். தோப்பும் என்றுமே பசுமையாக காணப்படும்.

ஒரு குழு 1000 மா மரங்களை கொண்டிருந்தால். ஏப்ரல் முதல் ஜீன் வரை பலன் கொடுக்கும். வருடத்தின் மற்ற மாதத்தில் பழங்களின்றி வெற்று மரமாக இருக்கும். ஆனால் வேறு இரண்டு வகையான சப்போட்டா அல்லது கொய்யா மரங்கள் கொண்டிருந்தால் வருடம் முழுவதும் அவைகள் மாறி மாறி பலன் கொடுத்து மகிழ்ச்சியான நிலையை உருவாக்கும்.

பல இண வளர்ச்சிக்கு இரு முக்கிய காரணங்கள் :

- ☞ எப்பொழுதும் சில மரங்கள் இலைகளை கொண்டிருந்தால் இயற்கையை சுத்திகரிகின்ற செயல்பாடு தொடர் நிலையை கொண்டு செயல்படும்.
- ☞ தொடர் கணி கொடுக்கும் நிலை தொடர் வருமானத்தையும் அளித்து, வளங்களையும் நிலைநிறுத்தும் .

## டிஐஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஐஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.
3. டிஐஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.
4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,
5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.
6. டிஐஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).
7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஐஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.
8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.
9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஐஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.
10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.
11. டிஐஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.
13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.
14. குழுவின் அங்கத்தினர்கள் டிஐஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.
15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்ளும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.